**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திட்டக்குடி**

முன்னிலை : செல்வி. ந. ஷாலினி, பி.காம்., எல்.எல்.பி,. (Hons)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

குற்றவியல் நீதித்துறை நடுவர், ( மு.கூ.பொ.), திட்டக்குடி

2026 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 08- ஆம் நாள் புதன்கிழமை

குற்ற பல்வகை மனு எண். 189/2026

திருமதி. ரமீஜா அம்ரீன் ( வயது 25),

க/பெ. நியாஸ் அஹமது

கதவு எண். 316, திருச்சி மெயின்ரோடு,

இராமநத்தம் ........ மனுதாரர்/புகார்தாரர்

/எதிர்/

காவல் ஆய்வாளர் ,

இராமநத்தம் காவல் நிலையம்.

1. நியாஸ் அகமது, த/பெ. முகமத் முஸ்தப்பா,

2. ஜெசிமா பானு, க/பெ. முகமது இலியாஸ்,

3. ஜெரினா பேகம் , க/பெ. முகமது முஸ்தப்பா

3. அல்ஃபியா பானு, க/பெ. நியாஸ் அஹமது ....... எதிர்மனுதாரர்கள்

**உத்தரவு**

புகார்தாரரை நம்பவைத்து கூட்டுச் சதி செயச்து ஏமாற்றியும் புகார்தாரரை திருமணம் செய்து அவரை கொடுமை படுத்தி அடித்து நகைகளை பிடுங்கி கர்ப்பமாக இருந்த புகார்தாரரை அவரது பெற்றோர் வீட்டிற்குஅடித்து அனுப்பி விட்டு கு ழந்தையை பார்க்காமல் புகார்தாரரை விவாகரத்து செய்யாமல போலியான ஆவணத்தை வதைத்து எதிர் மனுதாரரை திருமணம் செய்துகொண்டு 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் புகார்தாரரை

விவாகரத்து கொடுக்குமாறும் இல்லை என்றால் புகார்தாரரை மற்றும் அவரது குழந்தையை கொன்று விடுவதாக மிரட்டி வரும் எதிர்மனுதாரர்களின் மீது பாரதிய நாகரிகன் சுரஷா சன்ஹிதா பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய எதிர்மனுதாரர் காவல் துறை ஆய்வாளர் அவர்களுக்கு உத்தரவிடுமாறு புகார்தாரருக்கு அவரது **15** பவுன் நகை மற்றும் 5,00,000/- ரொக்க பணத்தை மீட்டுத் தர தகுந்த உத்தரவிட கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுவின் சுருக்கம்</u>**

புகார்தாரருக்கும், 1ஆம் எதிரிக்கும் கடந்த 14.08.2022-ம் தேதியன்று கோயமுத்தூர் கரும்புகடை இலாஹி நகர் எண்.1-ல் உள்ள மஸ்ஜிதுல் முனவ்வரா ஹனஃபி சுன்னத் வல் ஜமா அத் பள்ளிவாசலில் இசுலதாமிய முறைப்படி இரு வீட்டு பெற்றோர் உறவினர் மற்றும் பெரியவர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்று பின்னர் கோயம்புத்தூர் போத்தனூர் மெயின்ரோடு பிசிஃபுட்ஹால் -ல் வரவேற்பும் நடைபெற்றது என்றும் புகார்தாரருக்கும் 1-ம் எதிரிக்கும் இரண்டாவது திருமணம் என்றும், முதல் திருமணத்தில் புகார்தாரருக்கும் 1ம் எதிரிக்கும் குழந்தைகள் இல்லை என்றும், திருமணத்தின் போது புகார்தாரருக்கும் 1-ம் எதிரி மஹராக 22 கிராம் தங்க தாலி செயின் மற்றும் மோதிரம் அணிவித்தனர் என்றும், திருமண செலவுகளை புகார்தாரரின் தாயாரே செய்தார் என்றும், குடும்பம் நடத்த தேவையான அனைத்து விதமான

பொருட்களும், 15 பவுன் தங்க நகையும் சீர்வரிசையாக கொடுக்கப்பட்டது என்றும், திருமணத்திற்கு பிறகுதான் எதிரிகள் கோட்ட தாலி மற்றும் நகைகள் போலி என்று தெரியவந்தது என்றும், 1 ஆம் எதிரிக்கும், புகார்தாரருக்கும் கடந்த 26.04.2023-ம் தேதியன்று ஜியான்தன்வீர் என்ற பெண் குழந்தை கோயமுத்தூர் K.G. Hospital -ல் பிறந்தது குழந்தை பிறப்பதற்கு முன்பும் சரி பின்பும் சரி எந்த விதமான மருததுவ செலவுகளையும் எந்தவிதமான பொது செலவுகளையும் 1 ம் எதிரியோ அல்லது அவரது குடும்பத்தினரோ செய்யவில்லை என்றும், மருத்துவ செலவு மற்றும் பொது செலவு என மொத்தம் இரண்டு லட்சம் செலவானது மேற்படி செலவை புகார்தாரரின் தாயாரே செலவு செய்தார்கள் திருமணத்திற்கு பின் புகார்தாரரின் வங்கி கணக்கிற்கு 1-ம் எதிரி பணம் அனுப்பி பின் மேற்படி பணத்தை 1 ம் எதிரியின் தாயார் கேட்டுக் போதெல்லாம் எடுத்துக்கொடுக்க 1 ம் எதிரி சொல்வார் அதன்படி 1 ம்எ திரி அனுப்பி யபணம் ரூ.1,50,000/- ஐ அவரது தாயாராகிய 3 ம் எதிரி பெற்றுக்கொண்டார் மேலும் 2 ம் எதிரி சுமார் 1 லட்சம் வரை புகார்தாரரின் வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பப்பட்டு அதன்பின் 3 ம் எதிரி திரும்பக்கேட்டு பெற்றுக்கொண்டார் என்றும், திருமணத்திற்கு முன்பு பெண் பார்க்க 3 ம் எதிர்மனுதாரர் 2 ம் எதிர்மனுதாரர் மற்றும் 2 ம் எதிர்மனுதாரரின் கணவர் முகமது இலியாஸ் ஆகியோர் புகார்தாரரின் வீட்டு வந்தபோது 3 ம் எதிர்மனுதாரர் மாப்பிள்ளை குவைத்தில் வியாபார நிறுவனம் நடத்தி வருவதாகவும் மிருமணத்திற்கு பிறகு மனுதாரரை 1 ம் எதிர்மனுதாரர்

குவைத்தில் உள்ள வியாபாரத்தை கவனிக்க அழைத்துச்செல்வதாகவும் குவைத்திலேயே குடும்பம நடத்த வேண்டும் என்றும், மனுதாரரை நல்ல நிலையில் மதிப்புடன் நடத்துவதாகவும் உறுதி கூறினார் என்றும், ஆனால் திருமணத்திற்கு பிறகு 1ம் எதிரி புகார்தாரரை விட்டு விட்டு குவைத் சென்றுவிட்டார் என்றும், புகார்தாரரும் 1ம் எதிரியும் இரண்டு மாதம் கடலூரில் 1ம் எதிரியின் பெற்றோர் வீட்டில் வசித்து வந்தார்கள் என்றும், திருமணம் முடிந்த 2 நாட்களிலேயே 1ம் எதிரி, எனக்கும் உனக்கும் ஆன தாம்பத்திய வாழ்க்கை முடிந்துவிட்டது என்று கூறியதாகவும், 1ஆம் எதிரி வீட்டில் தங்குவதில்லை என்றும், வெளியில் பொழுதை கழித்து வந்ததாகவும், 2, 3 எதிரிகளிடம் கூறியபோது அவன்தான் அப்பப்போ வீட்டிற்கு வரான் அ ல்ல என்று கூறியதாகவும் மேலும் 1ம் எதிரிக்கு பல பெண்களிடம் தொடர்பு உள்ளதாகவும் உன்னையும் அப்படி ஏமாற்றிதான் திருமணம் செய்தோம் உனக்கு பிடிக்கவில்லை என்றால் உன் பெற்றோர் வீட்டிற்கு போய்விடு என்று மிரட்டியதாகவும், தான் கர்ப்பமானதை உணர்ந்து 1ம் எதிரியிடம் கூறி மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல கூறியபோது எனது அம்மாவையோ அக்காவையோ அழைத்துச் செல் என கூறியதாகவும், 2, 3 எதிரிகள் உன் அம்மா வீட்டிற்கு சென்று கர்ப்பத்தை கலைத்துவிட்டு வா பிறகு பார்க்கலாம் எனக்கூறியதாகவும், த னக்கு உடலநிலை சரியில்லை என 1ம் எதிரியிடம் கெஞ்சி மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல வற்புறுத்தியபோது 13.09.2022-ம்

தேதியன்று பெரம்பலூரில் உள்ள அற்புதா மருத்துவமனைக்கு அழைத்து சென்று வாசலிலேயே விட்டுவிட்டு நீயே பார்த்துக்கொள் என்று கூறிவிட்டு சென்றுவிட்டதாகவும் அதன்பிறகு சிகிச்சை முடித்துவிட்டு அவரை அழைத்தபோது வெகுநேரமாகியும் வரவில்லை பின்பு தொடர்ந்து அழைக்கவே மருத்துவமனைக்கு வந்து வீட்டிற்கு அழைத்துச்சென்றார் புகார்தாரர் கர்ப்பிணியாக இருந்தபோது உணவளிக்காமலும், மளிகை சாமான்கள் வாங்கி கொடுக்காமலும் அவர்கள் வெளியே சென்று சாப்பிட்டுவிட்டு வந்ததாகவும், 1ம் எதிரியிடம் கூறினால் நீயே ஏதாவது கடையில் வாங்கி சாப்பிட்டுக்கொள் என்று கூறியதாகவும் 1ஆம் எதிரி 10 பவுன் நகையும், ரூ.5,00,000/- பணமும் உனது அம்மாவிடம் வாங்கிக்கொண் வா அப்போதுதான் என்னுடன் சந்தோஷமாக வாழமுடியும் என கூறியதாகவும், 3ம் எதிரி என் மகன் கூறியதுபோல் பணமும், நகையும் வாங்கி வரவேண்டும் இல்லாவிட்டால் உன்னை தெண்டமாக இந்த வீட்டில் வைத்துக்கொள்ள முடியாது எனக் கூறிவிட்டார் மேலும் 2 வது எதிரி புகார்தாரரின் நாத்தனார் எனது தம்பி கூறியதைப்போல் பணமும் நகையும் வாங்கி வராவிட்டால் எனது தம்பியை குவைத்து அனுப்பி விடுவோம் என கூறியதாகவும், 1ம் எதிரி வீட்டில் இல்லாதபோது பணம் நகை கேட்டு 2ம் எதிரி அடித்து துன்புறுத்தியதாகவும், 3ம் எதிரி கெட்ட வார்த்தைகளில் திட்டி அடித்து கொடுமைப்படுத்தியதாகவும் புகார்தாரரிடமிருந்து 15 பவுன் நகையை 2ம் எதிரியின் மகளுக்கு கடந்த அக்டோர் மாதம் 2022 -ம் வருடம் வயது வந்த சீர

விழாவிற்கு வாங்கிகொண்டதாகவும், 21.10.2022 ஆம் தேதி 1ம் எதிரி அடித்து கொடுமைப்படுத்தியதால் புகார்தாரர் அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும், 1ஆம் எதிரி புகார்தாரரின் பெற்றோர் வீட்டிற்கு வந்து தான் வெளிநாடு செல்வதாகவும் அதற்கு பணம் கொடுத்தால்தான் புகார்தாரருடன் சேர்ந்து வாழ்வேன் என கூறி ரூ.5,00,000/-ஐ பணத்தை பெற்றுக்கொண்டு கர்ப்பமாக இருப்பதால் தங்களிடமே வைத்துக்கொள்ளும்படி கூறிவிட்டு சென்று விட்டதாகவும், 26.04.2023 -ம் தேதியன்று கோயமுத்தூர் K.G. மருத்துவ மனையில் பெண் குழந்தை பிறந்ததாகவும் குழந்தையை பார்க்க 2, 3 எதிரிகள் வந்ததாகவும் 1ஆம் எதிரி பல பெண்களுடன் தொடர்பு வைத்துள்ளதை அறிந்து அவர்களிம் புகார்தாரர் கேட்டபோது நான் அப்படித்தான் பல பெண்களுடன் உல்லாசமாக இருப்பேன் உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள் என கூறியதாகவும் புகார்தாரரின் குழந்தையை தூக்கிக்கொண்டு மருத்துவமனையை விட்டு வெளியே செல்ல முயன்றபோது அவரின் தாயார் செக்யூரிட்டியின் உதவியுடன் மீட்டதாகவும், 1ம் எதிரி புகார்தாரரையோ குழந்தையையோ ஒருமுறை கூட வந்து பார்க்கவில்லை என்றும், தான் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டதால் தனது கணவர் வேலை செய்யும் குவைத் நாட்டில் உள்ள ந்தியன் எம்பஸிக்கு Gmail வழியாக புகார் ஒன்றை 02.09.2023 ஆம் தேதி அனுப்பியதாகவும், இதற்கு 06.09.23 -ம் தேதி பதில் அறிவிப்பில் தனக்கும் தனது மனைவிக்கும் சிறு மனஸ்தாபம் தான் என்றும்,

தனக்கு பெண் குழந்தை பிறந்தது என்றும், அவர்களுடன் சேர்ந்து வாழ விரும்புவதாகவும், புகார்தாரரின் நகைகள் 3 ம் எதிரியிடம் இருப்பதாகவும் அதை பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவித்திருந்ததால் 3 ம் எதிரியிடம் நகைகளை கேட்டபோது தர மறுத்துவிட்டதாகவும், இதனால் 19.03.2024 -ம் தேதி தமிழ்நாடு முதலமைச்சருக்கு ஒரு புகார் அனுப்பியதாகவும் இப்புகாரின் பேரில் திட்டக்குடி அனைத்து மகளிர் காவல் ஆய்வாளர் விசாரணை மேற்கொண்டார் அதற்கும் எவ்வித பயனும் இல்லை என்றும், கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு 06.05.2024 -ம் தேதியன்று ஒரு புகார் அனுப்பியதாகவும் அதற்கும் எவ்வித பரிகாரமும் ஏற்படவில்லை என்றும், மேற்படி எதிரிகள் மீது கோவையில் பெண்களுக்கு எதிரான வன்கொடுமை சட்ட நீதிபதி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கு DVC.No.179/2024 நிலுவையில் இருப்பதாகவும் தற்பொழுது புகார்தாரரை திருமணம் செய்ததை மறைத்து 2 ம் திருமணம் என்று சொல்லி பெரம்பலூர் மாவட்டம், குன்னம் தாலுக்கா, லப்பைக்குடிக்காட்டைச் சேர்ந்த அவ்பியா பானு என்பவரை திருமணம் செய்து திருமண பதிவும் செய்து வைத்துள்ளதாகவும், புகார்தாரர் 16.10.2025 ம் தேதியன்று கேட்டபோது பணமும் நகையும் மீண்டும் சேர்ந்து வாழ்வேன் என்றும், உன்னால் என்னை ஒன்றும் செய்யமுடியாது என்றும், குவைத் ஜெயிலையே பார்த்துவிட்டு வந்தவன் என்றும், 1ம் புகார்தாரரின் கடவுச்சீட்டு காணாமல் போய்விட்டதாகவும் புதிய கடவுச்சீட்டுக்கு விண்ணப்பம் செய்துள்ளதாகவும் 4 ம் எதிரிக்கு கடவுச்சீட்டு

கிடைத்தவுடன் வெளிநாடு செல்ல இருப்பதாகவும், 4ம் எதிரி புகார்தாரரை விவாகரத்து பெற்றுக்கொண்டு சென்றுவிடு இல்லையென்றால் நடப்பதே வேறு என்று தெரிவிப்பதாகவும், 1 முதல் 4 ம் எதிரிகள் மீது 5ம் எதிரி அலுவலகத்தில் புகார்தாரரை புகார் கொடுத்து அவர்கள் மீது நடவடிக்கை ஏதும் எடுக்காமல் உள்ளது என்றும், எனவே 1 முதல் 4 எதிர்மனுதாரர்களின் மீது 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் புகார்தாரரை விவாகரத்து கொடுக்குமாறும் இல்லை என்றால் புகார்தாரரை மற்றும் அவரது குழந்தையை கொன்று விடுவதாக மிரட்டி வரும் எதிர்மனுதாரர்களின் மீது பாரதிய நாகரிக் சுரஷா சன்ஹிதா பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய எதிர்மனுதாரர் காவல் துறை ஆய்வாளர் அவர்களுக்கு உத்தரவிடுமாறு புகார்தாரருக்கு அவரது 15 பவுன் நகை மற்றும் 5,00,000/- ரொக்க பணத்தை மீட்டுத் தர தகுந்த உத்தரவிட கோரி பா.நி.சு.ச.பிரிவு 175(3) கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனு மனுதாரரின் உறுதிமொழி ஆவணம், பரிசீலிக்கப்பட்டது. மனுதாரரை திருமணம் செய்துக்கொண்டு மனுதாரரையும், அவரது குழந்தையையும் பராமரிக்காமலும், முறையான விவாகரத்து செய்யாமல் போலியான ஆவணத்தை வைத்து 4ம் எதிரியை திருமணம் செய்து கொண்டதாக தெரியவருகிறது, மேலும், 1முதல் 4 எதிரிகள் அடித்து துன்புறுத்தியதாகவும், மேலும் மனுதாரருக்கு திருமணத்தின்போது அவரது பெற்றோர் கொடுத்த சீதனமான 15 பவுன் நகைகளை பெற்றுக்கொண்டு

ஏமாற்றி வருவது போன்று மனு சங்கதிகளின் மூலம் தெரியவருகிறது. மேலும் இது சம்பந்தமாக மனுதாரர் இராமநத்தம் காவல் ஆய்வாளரிடம் 08.01.2026 ஆம் தேதி புகார் அளித்துள்ளார் புகாரின் நகல் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அஞ்சல் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவு தபால் மூலம் புகார் மனுவை அனுப்பியுள்ளார். புகார் மற்றும் அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்கண்ட காவல் நிலையத்தார் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள வில்லை என்பதால் மனுதாரர் பா.நா.சு.ச.பிரிவு 175(3)-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படை யிலும், கொள்தகு குற்றத்திற்கான முகாந்திரம் காணப்படுவதால் இராமநத்தம் காவல் ஆய்வாளர் மனுதாரரின் 08.01.2026 ஆம் தேதியிட்ட மனுதாரரின் புகாரின் மீது முதல்நிலை விசாரணை மேற்கொண்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சட்டப்படி நடவடிக்கை எடுத்து ஒரு மாத காலத்திற்குள் அறிக்கையை தாக்கல் செய்ய பா.நி.சு.ச. பிரிவு 175(3) -ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08- ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம் ( ந. ஷாலினி)
குற்றவியல் நீதித்துறை நடுவர்,( மு.கூ.பொ.)
திட்டக்குடி